# உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் தொடர்பான நெறிமுறை விதிகள்



UNHCR

UNITED NATIONS
HIGH COMMISSIONER FOR REFUGEES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

உள்நாட்டுக்குள் இடம்பெயர்வது பின் – பனிப்போர் யுகத்தின் தனிச் சிறப்பானதோர் அம்சமாகியுள்ளது. தனது உலகளாவிய விஸ்தீரணத்தின் காரணமாகவும் பரிமாணம் காரணமாகவும் பெருகிக் வரும் இச்சாதாரண நிகழ்வானது எம் அனைவரினதும் கவனத்திற்குள்ளாகியுள்ளது. ஆயுத முரண்பாடு, உட்பூசல் அல்லது திட்டமிட்ட மனித உரிமைகள் மீறல் போன்றவற்றின் நேரடித் தாக்கங்களால் வேரோடு பிடுங்கப்பட்டு ஒட்டங்காணும் – பெண்களும் பிள்ளைகளுமே இதில் பிரதானமாவர் – தமது சொந்தத் தேசத்தின் எல்லைக்குள்ளேயே இடம்பெயர்ந்தோரையுடைய நாடுகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது.

1982 இல் 11 நாடுகளில் 1.2 மில்லியன் உள்நாட்டில் இடம் பெயர்ந்த ஆட்கள் (உ.இ.பெ.ஆ.) இருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது, இரு தசாப்தங்களின் பின், ஆயுத முரண்பாட்டின் காரணமாக 40 நாடுகளில் அல்லது தேசங்களில் சுமார் 25 மில்லியன் உ.இ.பெ.ஆ. உள்ளனர்.

பாதுகாப்புக்காகவும் ஆதாரத்திற்காகவும் அரச, அரசாங்க உத்தியோகத்தர்களிலும். வேறு உள்நாட்டு அதிகாரங்களிலும் தங்கியிருப்பதனால், இடம் பெயர்ந்த ஆட்கள் உலகின் அபாயத்துக்குள்ளான மிகப் பெரும் தனிச் சனத் தொகையாக வகையிடப்பட்டுள்ளனர். வேறிடங்களைப் போ... வ இலங்கையிலும் இந்த ஊறுபடத்தக்க பிரிவின் இக்கட்டான வாழ்க்கை தவிர்க்க முடியாமல் அகதிப் பிரச்சினையுடன் இணைக்கப்பட்டுள்ளது, நாட்டை விட்டு வெளியேறும் உ.இ.பெ.ஆ. அகதிகளாகின்றனர். அதேவேளை மீள வீடு திரும்பும் அகதிகள் மீண்டும் இடம்பெயர்ந்தோராகின்றனர். பெரும்பாலும் அனாதரவான, மற்றும் ஒடுக்கப்பட்ட உ.இ.பெ.ஆ. தமது மனித உரிமைகளையும் சுதந்திரங்களையும் விட்டுக் கொடுக்கவும், தமது பொருளாதார, அரசியல் சந்தர்ப்பங்கள் சிதைக்கப்படவும் ஆளாக இடமேற்படுகின்றது. எனினும் இடம் பெயர்ந்தோர் மட்டுமே இவ்வாறு பிரதிகூலமாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதற்கில்லை; அவர்கள் வீட்டுச் செல்லும் சமூகமும், புகலிடம் தேடும் சமூகமும் கூடப் பெரும்பாலும் பாதிப்புக்குள்ளாகின்றன

1951 இ... ...ா. அகதிகள் சாசனம், மற்றும் 1967 உடன்படிக்கைச் செயற் பாட ... வரும் அகதிகளைப் போலல்லாது உ.இ.பெ. ஆட்களுக்கு ... பெரும் எண்ணிக்கைக்கு மத்தியிலும் அவர்களது பாதுகாப்பையும் ஆதாரத்தையும் உறுதிப்படுத்தக் கூடியதான சர்வதேச அங்கீகாரமுள்ள ஓர் உள்நாட்டுக் கருவி இல்லை. இந்த வெற்றிடத்தைக் கருத்திற் கொண்டு ஐ.நா. ஆனது ஓர் ஆய்வைப் பணித்து அது 1998 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உள்நாட்டில் இடம் பெயர்ந்தோருக்கான நெறிப்படுத்தும் கோட்பாடுகள்" இதனை உருவாக்க வழிகோலியது. அதன் முழுத் தொகுதியும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்தோரின் உரிமைகளினதும், அரசாங்கங்களும் வேறு அதிகாரங்களும் அவர்கள் மீது கொண்டுள்ள கடப்பாடுகளினதும் முதலாவது அதியாரபூர்வக் கூற்றின் பிரதிநிதித்துவமாக இந்நெறிப்படுத்தும் கோட்பாடுகள் அமைந்துள்ளன. சட்ட வரம்புக்குள் வராவிடினும் இம் 30 கோட்பாடுகளும் ஸ்திரமான சர்வதேச மனித நேய மற்றும் மனித உரிமைகள் சட்டங்கள், அத்துடன் அகதிகள் ஒத்திசைந்த சட்டம் போன்றவவற்றில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு பொதுவான வரைச்சட்டத்தை உள்ளடக்குகின்றது, இக்கருவிகளின் அவசியமான பகுதிகளை மீளக் கூறுவதற்கு மேலதிகமாக இந்த நெறிப்படுத்தும் கோட்பாடுகள் சூன்யப் பிரதேசங்களையும் நிரப்பு இடைவெளிகளையும் விபரிக்கின்றன.

இந்த நெறிப்படுத்தும் கோட்பாடுகளுக்கு எந்தவோர் அமைப்போ, அதிகாரமோ பாதுகாவலாக இல்லாததால் உ.இ.பெ.ஆ. உள்ளிட்ட நாம் அனைவருமே இதற்கான உள்ளார்ந்த பரிந்துரையாளர்களாகின்றோம். இதைக் கருத்திற் கொண்டு, 1987 முதல் இலங்கையில் நிலை கொண்டுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவானது மனித நேய உபகரணமாகவும், உள்நாட்டில் இடம் பெயர்ந்த ஆட்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு கான ஓர் அத்திவாரத்தைக் கட்டியெழுப்ப எவ்வாறு இக்கோட்பாடுகளைப் பாவிக்கலாம் எனப் பயிற்சியளிக்கும் நோக்கத்திலும் இந்நெறிப்படுத்தும் கோட்பாடுகளை ஊக்குவிக்கத் திடசங்கற்பம் பூண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியின் அறிமுகக் குறிப்பு

வன்செயற் பிணக்குகள், மனித உரிமை மீறல்கள் மற்றும் சஞ்சல முண்டாக்கும் சம்பவங்களின் நிமித்தம் வீடு வாசல்களிலிருந்து வெளியேறவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளான போதிலும், தம் சொந்த நாடுகளின் எல்லைக்குள்ளேயே தங்கியிருக்கும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் மலைபோன்ற பணியைச் சர்வதேச சமுதாயம் எதிர்நோக்கி நிற்கிறது. இந்த மக்கள் அநேகமாக எப்போதுமே பெரும் இழப்புகள், இன்னல்கள், பாகுபாடுகள் ஆகியவற்றை அனுபவிக்கிறார்கள். இந்தச் சவாலைச் சமாளிக்க வென்றே உள்நாட்டில் இடம் பெயர்வோர் தொடர்பான நெறி முறை விதிகள் வகுக்கப்பட்டன.

இந்த விதிகள், உள்நாட்டில் இடம் பெயர்வோர் இடம் பெயரும் ஒவ்வொரு கட்டத்திலும் தம் பாதுகாப்பு விடயத்தில் என்னென்ன உரிமைகளையும் உத்தரவாதங்களையும் பெறலாமென்பதைத் தெளிவுபடுத்துகின்றன; ஏதேச்சாதிகாரமாக விரட்டப்படுவதிலிருந்து பாதுகாப்பளிக்கின்றன; இடம் பெயரும் வேளையில் பாதுகாப்பு, ஒத்தாசை ஆகியவற்றை அளிப்பதற்கான வரைமுறையை வழங்குகின்றன; பாதுகாப்பாகத் திரும்பிச் சென்று மீளக்குடியேறி, சமுதாயத்தில் மீளவும் இணைவதற்கான உத்தரவாதங்களையும் முன்வைக்கின்றன. இவை எவரையும் கட்டுப்படுத்தும் சாசனமாக இல்லாவிட்டாலும் சர்வதேச மனித உரிமைகள், மனித நேயச்சட்டம், அதற்கமைவான அகதிச் சட்டம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றன.

1992இல் மனித உரிமைகள் ஆணைக்குழு எனக்கு இட்ட ஆணைக்கு அமையவும், பின்னர் இதே ஆணைக்குழு, ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஆகிய இரண்டும் நிறைவேற்றிய தீர்மானங்களுக்கு அமையவும் பல வருடகாலமாக இந்த விதிகள் வகுக்கப்பட்டன. ஆரம்பத்தில், உள்நாட்டில் இடம் பெயர்தலுக்கான காரணங்கள், அதன் விளைவுகள், இடம் பெயர்ந்தவர்கள் நிலைபற்றி சர்வதேச சட்டம் சொல்வதென்ன, தற்போதைய தாபன வாரியான ஏற்பாடுகளின் படி எந்த அளவுக்கு அவர்களின் தேவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றப்படுகின்றன, அவர்களின் பாதுகாப்பையும் அவர்களுக்கு அளிக்கும் ஒத்தாசையையும் செம்மைப்படுத்துதற்கான வழிவகைகள் எவை என்பவை பற்றி ஆராயும் படி கேட்கப்பட்டேன்.

அதற்கமைய, உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் சம்பந்தமாகத் தேவைப்பட்ட சட்ட மற்றும் தாபன வாரியான கட்டுக்கோப்புகளை உருவாக்குதலும், இடம்பெயர்ந்தவர்கள் சார்பாக அரசாங்கங்களும் ஏனையோரும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடச்செய்யும் பொருட்டு சம்பந்தப்பட்ட நாடுகளில் பணி மேற்கொள்ளுதலும் எனக்குக் கிடைத்த ஆணையின் பிரதான நடவடிக்கைகளாயின. உள்நாட்டில் இடம்பெயர்தவர்களுக்கு சர்வதேச சட்டத்தின் பிரகாரம் எந்த அளவுக்கு போதுமான பாதுகாப்புக்கிடைக்கிற தென்பது பற்றி சர்வதேசச் சட்ட நிபுணர் குழு ஒன்றுடன் சேர்ந்து ஆராய்ந்து, சட்ட நியதிகளின் தொகுப்பும் பகுப்பும் (E/CN4/1996/52/Add2) என்னும் படைப்பினைத் தயாரித்தேன். ஏற்கனவே வழக்கில் இருந்துவரும் சட்டம் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் விடயத்தில் போதுமான வீச்சுடையதாகக் காணப்பட்ட போதிலும் குறிப்பிடத்தக்க சிலவிடயங்கள் மட்டில் போதுமான பாதுகாப்பும் உதவியும் வழங்கத் தவறிவிடுவதைக் கண்டேன். இதன் பின்னர், உள் நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கு இசைவான பொதுச் சட்டக்கோப் பொன்றைத் தாயரிக்கும் படி மேற்படி ஆணைக்குழுவும் பொதுச் சபையும் என்னைப் பணித்தன. இதன் விளைவாக, நெறிமுறை விதிகள் வரையப்பட்டன. இவை நடைமுறையில் உள்ள மரபுகளை மீளவுரைப்பதுடன் தெளிவற்ற சில விடயங்களைத் தெளிவுபடுத்தி விட்ட குறை தொட்ட குறைகளை நிரப்புகின்றன.

1998இல் இந்த நெறிமுறை விதிகளை ஆணைக்குழுவிடம் ஒப்படைத்தேன். இதனை அடுத்து, இந்த நெறிமுறை விதிகளையும், அரசாங்கங்களுடனும் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களின் தேவைகளைக் கவனிக்கும் படி பணிக்கப்பட்டவர்கள், அவர்கள் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் ஆகிய அனைவருடனும் நான் நடத்திவரும் பேச்சுவார்த்தைகளில் இந்த விதிகளை உபயோகிப்பேன் என்ற எனதுநோக்கத்தையும் கவனத்திற் கொண்ட தீர்மானமொன்றை ஆணைக்குழு ஏற்றுக்கொண்டது. ஐக்கிய நாடுகள் முகவரகங்களுக் கிடையிலான நிலையியற் செயற்குழு இந்த விதிகளை வரவேற்றதுடன், தமது நிறைவேற்று அதிகார சபையினர், அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியர்கள், குறிப்பாக வெளிக்கள ஊழியர்கள், ஆகியோருடன் பகிர்ந்துகொள்ளும் படியும், உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் தொடர்பான நடவடிக்கைகளில் அவற்றைப் பிரயோகிக்கும் படியும் ஊக்குவித்தது.

உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுடன் பணியாற்றும் அரசாங்கங்கள், ஏனைய தகுதிவாய்ந்த அதிகாரிகள், அரசாங்கங்களுக்கிடையிலான அமைப்புகள், அரச சார்பற்ற அமைப்புகள் ஆகியவற்றுக்கு இந்த நெறிமுறை விதிகள் பயனுள்ள வழிகாட்டியாக அமைதல் வேண்டும். இவை பரந்த அளவில் பரப்பப்படுமெனவும் வெளிக்களத்தில் நடைமுறையில் பிரயோகிக்கப்படுமெனவும் நம்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள் நாட்டில் இடம் பெயர்ந்தோர் தொடர்பான நெறிமுறை விதிகள்

## அறிமுகம் - வீச்சும் நோக்கமும்

1. இந்த நெறிமுறை விதிகள் உலகெங்கும் தத்தம் நாடுகளில் இடம் பெயர் தோரின் விசேட தேவைகளை முன்னிட்டவை ; தம் இடங்களிலிருந்து பலவந்தமாக விரட்டப்படும் மக்களின் பாதுகாப்புத் தொடர்பான உரிமைகளையும் உத்தரவாதங்களையும் இனங்காட்டுகின்றன; அவர்கள் இடம் பெயரும் வேளையில் மட்டுமல்லாமல் தத்தம் இடங்களுக்குத் திரும்பிச் சென்று மீளக் குடியேறி, சமுதாயத்துடன் இணையும் போது எதிர்பார்க்கக் கூடிய பாதுகாப்பு, ஒத்தாசை ஆகியவற்றையும் தெளிவு படுத்துகின்றன.

2. இந்த விதிகளைப் பொறுத்த வரையில், உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் எனப்படுவோர் ஆயுதப் பிணக்குகள், பொதுப்படையான வன்செயல் நிலைமைகள், மனித உரிமைகள் மீறப்படல் அல்லது மனிதனால் ஏற்பட்ட அனர்த்தங்கள் ஆகியவற்றிலிருந்து தப்பிப்பிழைக்கும் பொருட்டு தம் குடிமனைகள் அல்லது வழக்கமான இருப்பிடங்கள் முதலியவற்றை விட்டு விட்டு இடம் பெயர்ந்து ஓடவேண்டிய நிர்ப்பந்தம் அல்லது நிலைமைக்கு உள்ளான போதிலும் சர்வதேச வாரியாக அங்கீகரிக்கப் பெற்ற தேச எல்லையைக் கடந்து செல்லாதிருப்பவர்களாவர்.

3. இந்த விதிகள் சர்வதேச மனித உரிமைகள், சர்வதேச மனிதநேயச் சட்டம் ஆகியவற்றைப் பிரதிபலிப்பனவும் அவற்றுக்கு அமைந்தனவுமாம். இவை பின்வருவோருக்கு நெறிகாட்டும் பாங்கானவை:

   (அ) உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் நியமித்த பிரதிநிதியானவர் தமக்குக் கிடைத்த ஆணையை நிறைவேற்றுதற்கு;

   (ஆ) உள்நாட்டில் மக்கள் இடம் பெயரும் நிலைமையை எதிர்நோக்கும் ராச்சியங்கள்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) உள்நாட்டில் இடம் பெயர்ந்தோருடன் தொடர்பாடும் மற்றெல்லா அதிகாரிகள் ,குழுக்கள், மக்கள் ஆகியோர்;

(ஈ) உள்நாட்டில் இடம்பெயர்வோர் விடயத்தில் ஈடுபடும் அரசாங்கங்களுக் கிடையிலான மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள்;

4. இந்த நெறிமுறை விதிகள் முடிந்த அளவு பரவலாகப் பிரசாரஞ் செய்யப்படவும் பிரயோகிக்கப்படவும் வேண்டும்.

# *பிரிவு 1 : பொது விதிகள்*

## விதி 1

1. நாட்டில் உள்ள ஏனையோர் சர்வதேச மற்றும் உள்நாட்டுச் சட்டத்தின் பிரகாரம் ஆண்டு அனுபவிக்கும் உரிமைகளையும் சுதந்திரங்களையும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களும் பூரண சமத்துவத்துடன் அனுபவித்தல் வேண்டும். உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் என்பதன் நிமித்தமாக இந்த உரிமைகள் , சுதந்திரங்களை அனுபவிப்பதில் அவர்களுக்குப் பாரபட்சம் காட்டலாகாது.

2. இந்த விதிகள் சர்வதேச சட்டத்தின் பிரகாரம் குற்றம் இழைப்பதை, அதிலும் குறிப்பாக இனக்கொலை, மனுக்குலத்துக் கெதிரான கொலைகள், போர்க் கொலைகள் ஆகியன தொடர்பாகத் தனியொருவருக்குள்ள கட்டுப்பாட்டை எந்த வகையிலேனும் பாதித்தலாகாது.

## விதி 2

1. இந்த விதிகளை எல்லா அதிகாரிகளும் குழுக்களும் ஆள்களும் தம் அந்தஸ்து எவ்வாறாயினும், பாதகமான பேதம் காட்டாது கடைப்பித்தல் வேண்டும். இந்த விதிகளைக் கடைப்பிடிப்பதனால் சம்பந்தப்பட்ட எந்த அதிகாரிகள், குழுக்கள், ஆள்களினதும் சட்ட வாரியான அந்தஸ்து பாதிக்கப்படலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சர்வதேச மனித உரிமைகள் அல்லது சர்வதேச மனித நேயச் சட்ட ஒப்பந்தம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டு விதிகளை அல்லது உள்நாட்டுச் சட்டத்தின் படி ஆள்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளை இந்த விதிகள் வரையறைப்படுத்துவதாகவோ மட்டுப்படுத்துவதாகவோ கொள்ளலாகாது. குறிப்பாக, இந்த விதிகள் மற்றெந்த நாடுகளிலும் புகலிடம் தேடுவதற்கும் புகலிடவசதியை அனுபவிப்பதற்கும் உண்டான உரிமையைப் பாதிக்கமாட்டா.

## விதி 3.

1. தம் சட்ட ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்திலிருந்து புலம் பெயர்ந்த மக்களுக்குப் பாதுகாப்பும் மனித நேய உதவியும் வழங்கும் கடமையும் பொறுப்பும் தேசிய அதிகாரிகளைச் சார்ந்தன.

2. இந்த அதிகாரிகளிட மிருந்து பாதுகாப்பையும் மனிதநேய உதவியையும் கோரவும் பெற்றுக் கொள்ளவும் உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கு உரிமையுண்டு. கோரிக்கை விடுத்தமைக்காக அவர்கள் மீது சட்ட நடவடிக்கையோ தண்டனையோ விதித்தலாகாது.

## விதி 4

1. இந்த விதிகளை சாதி, நிறம், பால், மொழி, மதம் அல்லது நம்பிக்கை, அரசியல் அல்லது பிற கருத்து, தேசிய, இனவாரி அல்லது சமூகப் பூர்வீகம், சட்ட அல்லது சமூக அந்தஸ்து, வயது, ஊர், சொத்து, பிறப்பு, அல்லது இவற்றை யொத்த ஏனைய அளவுகோல் முன்னிட்ட எத்தகைய பாகுபாடுமின்றிப் பின்பற்றுதல் வேண்டும்.

2 உள்நாட்டில் இடம் பெயர்ந்த பிள்ளைகள், கர்ப்பிணிகள், குழந்தைகளையுடைய தாய்மார், குடும்பத் தலைவிகள், ஊனமுற்றோர், வயோதிபர்கள் போன்றவர்கள் தம் நிலைமைக்கு ஏற்றவாறான பாதுகாப்பையும் உதவியையும் பெற்றுக்கொள்வதற்கும் அவர்களின் விசேட தேவைகளைக் கருத்திற் கொண்டதான சிகிச்சை பெறவும் உரிமையுடையவர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவு 11 : இடம் பெயராது பாதுகாத்தல் தொடர்பான விதிகள்

## விதி 5

1 மனித உரிமைகள், மனித நேயச் சட்டம் உள்ளிட்ட சர்வதேச சட்டத்தின் படி, சகல அதிகாரிகள், சர்வதேச செயலர்கள் ஆகியோர் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மக்கள் இடம் பெயர்வதற்கு வழி வகுக்கக் கூடிய நிலைமைகளைத் தடுக்கவும் தவிர்க்கவும் தமக்குள்ள கடப்பாடு கனம் பண்ணப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

## விதி 6

1, தன் வீடு அல்லது வழக்கமான இருப்பிடத்திலிருந்து விருப்பத்துக்கு மாறாகப் புலம் பெயரும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகாது பாதுகாப்புப் பெறும் உரிமை ஒவ்வொரு மனிதப் பிறவிக்கும் உண்டு.

2, விருப்பத்துக்கு மாறான புலப்பெயர்வுகளில் பின்வரும் புலப்பெயர்வுகள் அடங்கும்:

(அ) பாதிக்கப்பட்ட மக்களின் இன, மத அல்லது சாதிக்கட்டுக் கோப்பை மாற்றியமைக்கக் கூடிய இனவெறி, இன நீக்கம் அல்லது அவற்றை யொத்த கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டமையும் சந்தர்ப்பங்கள்;

(ஆ) ஆயுதப் பிணக்குகளில் சம்பந்தப்பட்ட குடிமக்களின் பாதுகாப்பு அல்லது ராணுவ நிர்ப்பந்தங்களின் தேவை அல்லாத சந்தர்ப்பங்கள்;

(இ) பொதுமக்களின் மேலான நலன்களுக்கு அவசியமான தென நியாயப்படுத்த இயலாத, அவர்களின் மேலான நலன்களை அலட்சியப்படுத்தும் பாங்கான பாரிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்கள்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பும் ஆரோக்கியமும் அவர்களை அப்புறப்படுத்துவதிலேயே தங்கியுள்ள தென்னும் நிலை தோன்றாத பேரபாயங்களின் போது;

(உ) கூட்டுத் தண்டனையாக உபயோகப்படுத்தும் சந்தர்ப் பங்கள்;

3. புலப்பெயர்வு, சந்தர்ப்ப சூழ்நிலைகள் சீராகிய பின்னரும் நீடித்தலாகாது.

## விதி 7

1. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மக்களை இடம் பெயர்த்தல் தொடர்பான முடிவு எதனையும் எடுக்கு முன்னர் இடப் பெயர்வைத் தவிர்த்தற்கான மாற்று வழிவகைகள் அனைத்தையும் ஆராய்ந்து உறுதிசெய்தல் வேண்டும். மாற்று வழி வகை இல்லாத பட்சத்தில் இடம் பெயர்தலையும் அதனால் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளையும் குறைத்தற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

2. அவ்வாறான பெயர்வை முன் நின்று நடத்தும் அதிகாரிகள் புலம்பெயரும் மக்களுக்கு முறையான இருப்பிடவசதிகள் ஏற்பாடு செய்யப்படுவதையும் அத்தகைய பெயர்வுகள் திருப்திகரமான பாதுகாப்பு, போசாக்கு, ஆரோக்கியம், சுகாதாரம் ஆகியன உள்ள நிலைமைகளில் மேற்கொள்ளப் படுவதையும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பிரியாதிருப்பதையும் முடிந்தளவு நடைமுறை சாத்தியமான வகையில் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

3. ஆயுதப் பிணக்குகள், பேரபாயங்கள் ஆகியவற்றினால் ஏற்படும் அவசர நிலைமைகளில் அல்லாமல் வேறு சந்தர்ப்பங்களில் புலம் பெயர்தல் நிகழுமானால் பின்வரும் உத்தரவாதங்கள் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்:

(அ) அவ்வாறான நடைமுறைகளை உத்தரவிடுதற்குச் சட்டப்படி அதிகாரம் பெற்ற அரசாங்க அதிகாரி ஒருவர் தீர்க்கமான முடிவொன்றை எடுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) இடம் பெயர வேண்டியதற்கான காரணங்கள், பின்பற்றப் படும் நடைமுறைகள் ஆதியன பற்றிய முழு விவரங்களையும் இடம் பெயரவிருப்போர்க்கு வழங்குதற்கான சகல நடவடிக்கைகளும் உத்தரவாதம் செய்யப்படல் வேண்டும். நட்டஈடு, மறுகுடியேற்றம் ஆகியன பொருந்துமிடத்தில் அவை பற்றியும் உத்தரவாதமளித்தல் வேண்டும்.

(இ) இடம் பெயரவிருப்போரின் சுயாதீனமான, அறிவறிந்த சம்மதம் பெறப்படல் வேண்டும்.

(ஈ) பாதிக்கப்பட்டவர்கள், குறிப்பாகப் பெண்கள், தம் மறுகுடியேற்றம் தொடர்பான திட்டத்தை வகுப்பதிலும் அதனை நிர்வகிப்பதிலும் ஈடுபடச் செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முயலுதல் வேண்டும்.

(உ) சட்டத்தை நிலைநாட்டும் நடைமுறைகள் வேண்டப்படும் போது தகுதி வாய்ந்த சட்ட அதிகாரிகள் அவற்றை நிலைநாட்டுதல் வேண்டும்.

(ஊ) அத்தகைய முடிவுகளைத் தகுந்த சட்ட அதிகாரிகளைக் கொண்டு மீளாய்வு செய்தல் உள்ளிட்ட, செம்மையான பரிகாரத்தைப் பெறும் உரிமைக்கு மதிப்பளித்தல் வேண்டும்.

## விதி 8

பாதிக்கப்பட்டவர்களின் உயிர், கௌரவம், சுதந்திரம், பாதுகாப்பு ஆகியவற்றை மறுக்கும் வகையில் இடப் பெயர்வு மேற்கொள்ளப்படலாகாது.

## விதி 9

சுதேசப் பழங்குடிமக்கள், சிறுபான்மையினத்தவர்கள், விவசாயிகள், முல்லைநிலவாசிகள் மற்றும் தம் நிலத்தை நம்பியும் அதில் பற்றுக் கொண்டும் வாழ்வோர் ஆகிய ஏனைய குழுக்கள் இடம் பெயராது காக்கும் விசேட கடப்பாடு அரசாங்கத்துக்கு உரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவு 111 : இடம்பெயரும் சமயத்தில் பின்பற்ற வேண்டிய பாதுகாப்புச் சார்ந்த விதிகள்

## விதி 10

1. ஒவ்வொரு மனிதப் பிறவிக்கும் உயிர்வாழும் உரிமை இயல்பாய மைந்த தொன்றாகும். அதனைச் சட்டத்தின் மூலம் காத்தல் வேண்டும். எவரின் உயிரையும் நியாயமின்றி அபகரித்தலாகாது. உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் பின்வருவனவற்றிலிருந்து விசேடமாகப் பாதுகாக்கப்பட வேண்டியவர்களாவர் :

( ஆ) இனக்கொலை
( ஆ) படுகொலை
(இ) நீதி நியாயமின்றி அல்லது தன் முனைப்பாகச் சாகடித்தல்

(ஈ) வற்புறுத்தலின் பேரில் காணாமற் போதல். இதில் மரண அச்சுறுத்தல் அல்லது மரணத்தில் முடிவுறும் கடத்தல் அல்லது ஏற்றுக்கொள்ளாத தடுப்புக்காவல் என்பனவும் அடங்கும்.

மேற் சொன்ன செயல் எதனையும் புரியும்படி வற்புறுத்துதலும் தூண்டுதலும் தடுக்கப்படல் வேண்டும்.

2, போராட்டங்களில் ஈடுபடாது அல்லது இனிமேல் பங்கு கொள்ளாதவர்களாய் உள்நாட்டில் இடம் பெயர்ந்திருப்போர் மீது தாக்குதல்கள் அல்லது ஏனைய வன்செயல்களைப் புரிதல் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தடைசெய்யப்பட்டுள்ளது. உள் நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்; குறிப்பாக பின் வருவனவற்றிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டியவர்களாவர்:

(அ) நேரடியான அல்லது வரைமுறையற்ற தாக்குதல்கள் அல்லது ஏனைய வன் செயல்கள். இவற்றில் குடிமக்கள் மீது தாக்குதல் நடத்துவதை அனுமதிக்கும் பிரதேசங்களை அமைத்தலும் அடங்கும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) போரில் பட்டினியை ஒரு நடைமுறையாகப் பயன்படுத்துதல்;

(இ) இராணுவ இலக்குகளைத் தாக்குதலிலிருந்து காக்கும் கவசமாக அல்லது ராணுவ நடவடிக்கைகளை மறைக்க, அவற்றுக்குச் சாதகமாக அல்லது தடையாக, இடம் பெயர்ந்தோரை உபயோகித்தல்;

(ஈ) அவர்களின் முகாம்கள் அல்லது குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத்துதல்;

(உ) ஆள்களுக்கெதிராகக் கண்ணிவெடிகளை உபயோகித்தல்.

## விதி 11

1. ஒவ்வொரு மனிதப் பிறவியும் கௌரவமும் உடலால், மனதால், ஒழுக்கத்தால் பூரணத்துவம் பெறவும் உரிமையுடையவராவர்.

2. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் , அவர் தம் சுதந்திரம் மட்டுப்பட்டதோ மட்டுப்படாததோ, எவ்வாறாயினும் பின்வருவனவற்றிலிருந்து விசேடமாகப் பாதுகாக்கப்பட வேண்டியவர்களாவர்;

(அ) பாலியல் வல்லுறவு, அங்கச் சிதைவு, காட்டுமிராண்டித்தனமாக அல்லது மான பங்க மேற்படும் முறையில் நடத்துதல் அல்லது தண்டித்தல், பாலியல் வன்செயல், பாலியல் நடத்தையில் ஈடுபடும் படி வற்புறுத்துதல், மற்றெந்த வகையான அகௌரவத் தாக்குதல் போன்ற இழிவுபடுத்தும் செயல்கள் மூலம் ஒருவரை அவமானப்படுத்துதல்;

(ஆ) அடிமையாக நடத்துதல் அல்லது மணவினைக் கென விற்றல், பாலியல் பாங்கான ஏமாற்று நடத்தை போன்ற தற்காலத்திய அடிமைத்தனம் அல்லது பிள்ளைகளை வற்புறுத்தி ஊழியம் செய்வித்தல்;

(இ) உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் மத்தியில் பீதி உண்டாக்கும் எண்ணத்துடன் மேற்கொள்ளப்படும் வன்செயல்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற் சொன்ன செயல்கள் எவற்றையும் மேற்கொள்ளப் போவதாக அச்சுறுத்துதலும் மேற்கொள்ளும் படி தூண்டுதலும் தடைசெய்யப்படல் வேண்டும்.

## விதி 12

1. ஒவ்வொரு மனிதப் பிறவியும் சுதந்திரம், தற்பாதுகாப்பு ஆகியவற்றுக்கு உரிமையுடையவராவர். எவரும் கேள்வி நியாயமற்ற கைது அல்லது தடுப்புக் காவல் ஆகியவற்றுக்கு உட்படுத்தப்படலாகாது.

2, உள்நாட்டில் இடம் பெயர்ந்தோருக்கு மேற் சொன்ன உரிமையை நிலைநாட்டும் பொருட்டு, அவர்களைத் தடுத்து அல்லது முகாமில் வைக்காதிருத்தல் வேண்டும். விதி விலக்கான சந்தர்ப்பங்களில் அவ்வாறு அடைத்து வைத்தாலும் அது அத்தகைய சந்தர்ப்பங்கள் நிலவும் காலத்துக்கு மேல் நீடித்தலாகாது.

3. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் அவர்களின் இடப் பெயர்வை முன்னிட்டு பாகுபாடான முறையில் கைது செய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுதல் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கப்படல் வேண்டும்.

4. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் பணயக் கைதிகளாக நடத்தப்படலாகாது.

## விதி 13

1. இடம் பெயர்ந்த பிள்ளைகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் போர் அணியில் சேர்க்கவோ போர்நடவடிக்கைகளில் பங்குபெறும் படி கோர அல்லது அனுமதிக்கவோ கூடாது.

2. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களை, அவர்கள் இடம் பெயர்ந் தவர்கள் என்பதற்காக, பாகுபாடான முறையில் எந்த ஆயுதப்படையிலேனும் சேர்த்துக் கொள்ளப்படாமல் பாதுகாத்தல் வேண்டும். விசேடமாக, போரணியில் சேரும்படி நிர்ப்பந்திப்பதற்காக அல்லது சேரமறுப்பதற்குத் தண்டனையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரூரமாக, காட்டுமிராண்டித்தனமாக அல்லது இழிவு படுத்தும் பாங்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல் சகல சந்தர்ப்பங்களிலும் தடுக்கப்பட்டுள்ளது.

## விதி 14

1. உள்நாட்டில் இடம் பெயர்ந்த ஒவ்வொருவரும் இடம் பெயரும் உரிமையும் தம் வசிப்பிடத்தைத் தெரிவு செய்யும் சுதந்திரமும் உடையவராவர்.

2. குறிப்பாக, உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் முகாம்களில் அல்லது ஏனைய குடியிருப்புகளில் சுதந்திரமாக நுழையவும் வெளியேறவும் உரிமையுடையவர்களாவர்.

## விதி 15

1. உள் நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள்:

(அ) நாட்டின் வேறொரு பகுதியில் பாதுகாப்புத் தேடும் உரிமையுடையவர்களாவர்;

(ஆ) நாட்டை விட்டு வெளியேறும் உரிமையுடையவர்களாவர்;

(இ) மற்றொரு நாட்டில் புகலிடம் தேடும் உரிமையுடையவர்களாவர்;

(ஈ) தம் உயிர், பாதுகாப்பு, சுதந்திரம் அல்லது ஆரோக்கியம் ஆபத்துக்குள்ளாகக் கூடிய எந்த இடத்துக்கும் திரும்பிச்செல்லும் படி அல்லது எந்த இடத்திலும் குடியேறும் படி நிர்ப்பந்திக்கப்படுவதிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமையுடையவர்களாவர்.

## விதி 16

1. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் அனைவரும், காணாமற் போன உறவினர்களின் கதி என்னவென அறியும் உரிமையுடைய வர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. உள்நாட்டில் இடம் பெயர்ந்து காணமாற் போனவர்களின் கதியை நிர்ணயிப்பதிலும் அவர்களின் இருப்பிடங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதிலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முயல்வதுடன் இந்தப்பணியில் ஈடுபட்டுள்ள சர்வதேச அமைப்புகளுடன் ஒத்துழைத்தலும் வேண்டும். விசாரணையின் முன்னேற்றம் பற்றி மிக நெருங்கிய உறவினருக்குத் தகவல் கொடுப்பதுடன் பெறுபேறு பற்றி அறிவித்தலும் வேண்டும்.

3. இறந்தவர்களின் பூதவுடைலச்சேகரித்து அடையாளம் காண, சேதமுறாது அல்லது சிதைவுறாது தடுக்க, அதனை மிக நெருங்கிய உறவினருக்குச் சேர்ப்பிக்க அல்லது மரியாதையாக அப்புறப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முயலுதல் வேண்டும்.

4 உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களின் நலன்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பாதுகாக்கப்படவும் கனம்பண்ணப்படவும் வேண்டும். உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தமது இறந்த உறவினர்களின் அடக்கத் தலங்களைத் தரிசிக்கும் உரிமையுடையவர்களாவர்.

## விதி 17

1. ஒவ்வொரு மனிதப் பிறவியும் தன் குடும்ப வாழ்க்கைக்கு மதிப்புப்பெறும் உரிமையுடையவராவர்.

2. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களின் இந்த உரிமைக்கு மதிப்பளிக்கும் பொருட்டு குடும்ப உறுப்பினர்கள் ஒன்றாக இருக்க விரும்பும் பட்சத்தில் அவர்கள் அவ்வாறிருக்க இடமளித்தல் வேண்டும்.

3. இடம் பெயர்ந்து பிரிந்த குடும்பங்களைக் கூடிய விரைவில் மீண்டும் ஒன்று சேர்த்தல் வேண்டும். இத்தகைய குடும்பங்களை, அதிலும் குறிப்பாகப் பிள்ளைகள் சம்பந்தப்படும் போது, மீண்டும் ஒன்று சேரவைப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துதற்கு எல்லா முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும். குடும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர்களின் விசாரணைகளுக்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் வசதி செய்து கொடுப்பதுடன் குடும்பங்கள் மீளவும் ஒன்று சேரச் செய்வதில் ஈடுபட்டுள்ள மனித நேய அமைப்புகளுக்கு ஊக்கமளித்து ஒத்துழைத்தலும் வேண்டும். உள்நாட்டில் இடம் பெயர்ந்த குடும்பங்களை முகாம்களில் தடுத்து அல்லது அடைத்துவைத்ததன் விளைவாகத் தனிப்பட்ட சுதந்திரம் மட்டுப்பட்டிருந்தாலும் ஒன்றாகச் சேர்ந்திருக்க அவர்களுக்கு உரிமை உண்டு.

## விதி 18

1. உள்நாட்டில் இடம் பெயர்ந்த அனைவரும் தகுந்த, தரம் வாய்ந்த வாழ்க்கைக்கு உரிமையுடையவர்களாவர்.

2. உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கு தகுதி வாய்ந்த அதிகாரிகள் எத்தகைய சந்தர்ப்பமென்பதைப் பொருட்படுத்தாமலும் பாகுபாடுகாட்டாமலும் குறைந்த பட்சமாக பின்வருவனவேனும் கிடைப்பதை உறுதி செய்தல் வேண்டும்:

   (அ) அத்தியாவசிய உணவும் குடிக்கத் தக்க நீரும்;
   (ஆ) அடிப்படையான உறைவிடமும் குடிமனையும்;
   (இ) தகுந்த ஆடை அணிகள்;
   (ஈ) அத்தியாவசிய வைத்திய சேவைகளும் சுகாதார வசதிகளும்.

3. இந்த அடிப்படை வழங்கல்களைத் திட்ட மிடுவதிலும் விநியோகிப்பதிலும் பெண்கள் முழுமையாகப் பங்குபெறுவதை உறுதிப்படுத்துதற்கு விசேட பிரயாசை எடுத்தல் வேண்டும்.

## விதி 19

1. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களில் காயமுற்றோர், நோயுற்றோர் மட்டுமல்லாமல் ஊனமுற்றோரும் சாத்தியமானவரையில் பூரணமாகவும் முடிந்தளவு தாமதமின்றியும் தேவையான வைத்திய பராமரிப்பு, கவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றைப் பெறல் வேண்டும். இது விடயத்தில் வைத்தியம் ஒன்றைத் தவிர, வேறெந்தக் காரணத்தை முன்னிட்டும் பாகுபாடு காட்டலாகாது. தேவைப்படும் சமயத்தில் இவர்களுக்கு உளவியல் மற்றும் சமூக நலச்சேவைகள் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

2. பெண்களின் ஆரோக்கியத் தேவைகள் தொடர்பாக விசேட கவனஞ் செலுத்துதல் வேண்டும். இவற்றில் பெண்களுக்குச் சுகாதார பராமரிப்பு மற்றும் சேவைகளை வழங்குவோரை அணுகும் வசதி மற்றும் சந்தான விருத்திச் சுகாதாரப் பராமரிப்பு உள்ளிட்ட சேவைகள் மட்டுமல்லாமல் பாலியல் மற்றும் இம்சைகளுக்கு ஆளானவர்களுக்குத் தகுந்த ஆலோசனைச் சேவைகள் வழங்குவதும் அடங்கும்.

3. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் மத்தியில் எயிட்ஸ் அடங்கலான தொற்று நோய்கள் பரவாமற் தடுப்பதில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

## விதி 20

1. ஒவ்வொரு மனிதப் பிறவியும் எங்கும் சட்டத்தின் முன்னிலையில் ஓர் ஆளாகக் கணிக்கப்படுவதற்கு உரிமையுடையவராவர்.

2. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கு இந்த உரிமை கிடைக்கச் செய்யும் பொருட்டு, அவர்கள் தம் சட்ட உரிமைகளை ஆண்டனுபவிப்பதற்கு அவசியமான கடவைச் சீட்டுகள், ஆள் அடையாள ஆவணங்கள், பிறப்புச் சான்றிதழ்கள், மணவினைச் சான்றிதழ்கள் போன்ற சகல பத்திரங்களையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவர்களுக்கு வழங்குதல் வேண்டும். குறிப்பாக, புதிய சான்றுப்பத்திரங்கள் அல்லது இடம் பெயரும் வேளையில் இழந்துவிட்ட பத்திரங்களுக்கான மாற்றுப் பத்திரங்களைப் பெறுவதற்கு அதிகாரிகள் வசதி செய்தல் வேண்டும். இது விடயத்தில் இந்தப் பத்திரங்களை அல்லது தேவைப்படும் ஏனைய ஆவணங்களைப் பெறுவதற்கு ஒருவர் தாம் வழக்கமாக வாழ்ந்த இடத்திற்குத் திரும்பிப் போக வேண்டும் என்றவாறான அநியாய நிபந்தைனகள் விதிக்கப்படலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இத்தகைய ஆவணங்களைப் பெறும் விடயத்தில் பெண்கள், பிள்ளைகள் ஆகியோருக்குச் சமமான உரிமைகள் இருத்தல் வேண்டும். அத்துடன் இத்தகைய ஆவணங்கள் அவர்களின் சொந்தப் பெயர்களில் வழங்கப்படல் வேண்டும்.

## விதி 21

1. கேள்வி நியாயமின்றி எவருடைய சொத்துகளையும் உடைமைகளையும் அபகரித்தலாகாது.

2. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களின் சொத்துகளும் உடைமைகளும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பாதுகாக்கப்படல் வேண்டும். குறிப்பாக பின்வருவனவற்றிலிருந்து காக்கப்படல் வேண்டும்.

   (அ) அபகரித்தல்;

   (ஆ) நேரடியான அல்லது தாறுமாறான தாக்குதல்கள் அல்லது ஏனைய வன்செயல்கள்;

   (இ) ராணுவ நடவடிக்கைகள் அல்லது இலக்குகளுக்குப் பாதுகாப்புக் கவசமாக உபயோகித்தல்;

   (ஈ) பழிவாங்குவதற்கான ஏதுவாகப் பயன்படுத்துதல்;

   (உ) கூட்டுத் தண்டனையில் வெளிப்பாடாக நாசமாக்குதல் அல்லது பராதீனப்படுத்துதல்;

3. உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் விட்டுச்சென்ற சொத்துகளும் உடைமைகளும்அழிவு, கேள்வி நியாயமற்ற, சட்ட விரோதமான பிரயோகம், குடியிருப்பு அல்லது பாவனையிலிருந்து பாதுகாக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதி 22

1. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் முகாம்களில் வாழ்ந்தாலும் வாழா விட்டாலும், இடம்பெயர்ந்ததன் காரணமாக பின்வரும் உரிமைகளை அனுபவிக்கும் விடயத்தில் பாரபட்சத்துக்கு உள்ளாகலாகாது:

(அ) சிந்தனை, மனச்சாட்சி, மதம் அல்லது நம்பிக்கை, கருத்து, பேச்சு ஆகியவற்றுக்கான உரிமைகள்;

(ஆ) தொழில் வாய்ப்புகளை விருப்பம் போலத் தேடவும் பொருளாதார நடவடிக்கைகளில் பங்குபெறவுமான உரிமை;

(இ) சமுதாய விவகாரங்களில் தன்னிச்சையாகச் சேர்ந்து, சமமாகப் பங்குபெறும் உரிமை;

(ஈ) வாக்களிப்பதற்கும் அரசாங்க மற்றும் பொது விவகாரங்களில் பங்குபெறுதற்குமான உரிமையும் இந்த உரிமையைப் பிரயோகிப்பதற்கான மார்க்கங்களை அணுகும் உரிமையும்;

(உ) தாம் விளங்கிக் கொள்ளும் மொழியில் தொடர்பாடும் உரிமை;

## விதி 23

1. ஒவ்வொரு மனிதப் பிறவியும் கற்கும் உரிமை உடையவராவர்.

2. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள், அதிலும் குறிப்பாகப் பிள்ளைகள், இந்த உரிமையை அனுபவிப்பதற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், தொடக்க நிலையில் இலவச கட்டாயக்கல்வி பெறுதலை உறுதிசெய்தல் வேண்டும். இந்தக் கல்வி அவர்களின் கலாசாரத் தனித்துவம், மொழி, மதம் ஆகியவற்றுக்கு மதிப்பளிப்பதாய் அமைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கல்வி சார்ந்த செயற் திட்டங்களில் பெண்களும் சிறுமிகளும் பூரணமாகவும் சமமாகவும் பங்கு பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு விசேட முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

4. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் முகாம்களில் வாழ்ந்தாலும் வாழா விட்டாலும் நிலைமைகள் தோதாக அமைந்ததும் கல்வி மற்றும் பயிற்சி வசதிகள் அவர்களுக்கு, அதிலும் குறிப்பாக விடலைப் பருவத்தினர், பெண்கள் ஆகியோருக்கு, ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

# பிரிவு iv: மனித நேய உதவிகள் தொடர்பான விதிகள்

## விதி 24

1. மனித நேய உதவிகள் யாவும் மனுக்குலத்தின் விதிகளுக்கு அமையவும் பாரபட்சமின்றியும், பாகுபாடு காட்டாமலும் நிறைவேற்றப்பட வேண்டும்.

2. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்குரிய மனித நேய உதவிகள் வேறு காரியங்களுக்கு, அதிலும் குறிப்பாக, அரசியல் அல்லது ராணுவ நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படலாகாது.

## விதி 25

1. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கு மனித நேய உதவிகள் வழங்கும் பிரதான கடமையும் பொறுப்பும் தேசிய அதிகாரிகளைச் சார்ந்ததாகும்.

2. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்குத் தாபரமளிக்கும் வகையில் தம் சேவைகளை வழங்கும் உரிமை சர்வதேச மனிதநேய அமைப்புகளுக்கும் தகுதிவாய்ந்த ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலர்களுக்கும் உண்டு. இத்தகைய உதவிவழங்க எவரும் முன்வந்தால் அதனை விரோதமான செயலாக அல்லது நாட்டின் உள்விவகாரத்தில் தலையிடுவதாகக் கொள்ளாமல் நல்லமனதுடன் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். அதற்குச் சம்மதம் வழங்குவதை எதேச்சாதிகாரமான முறையில், அதுவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தேவையான மனிதநேய உதவிகளை வழங்க இயலாத அல்லது விரும்பாத நிலையில், மறுத்தலாகாது.

## விதி 26

1 மனித நேய உதவி வழங்குவதில் ஈடுபட்டுள்ளவர்களையும் அவர்களின் போக்குவரத்து, வழங்கும் பொருள்கள் ஆகியவற்றையும் மதித்துப் பாதுகாத்தல் வேண்டும். தாக்குதல் அல்லது ஏனைய வன் செயல்களுக்கு அவர்கள் இலக்காகக் கூடாது.

## விதி 27

1, சர்வதேச மனிதநேய அமைப்புகளும் ஏனைய பொருத்தமான செயலர்களும் உதவிகளை வழங்கும் போது, உள்நாடடில் இடம் பெயர்ந்தவர்களின் தேவைகளையும் மனித உரிமைகளையும் பேணுதற்கு உரிய மதிப்பளிப்பதுடன் அது விடயமாக தகுந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும். இதனை நிறைவேற்றும் போது இந்த அமைப்புகளும் செயலர்களும் அந்தந்தச் சர்வதேச நியமங்களையும் ஒழுக்க விதிகளையும் மதித்தல் வேண்டும்.

2. மேலேயுள்ள பந்தி இதற்கென ஆணை பெற்ற சர்வதேச அமைப்புகளின் பாதுகாப்புத் தொடர்பான பொறுப்புகளைப் பாதிக்கமாட்டா. அவற்றின் சேவைகள் அரசாங்கங்களால் வழங்கப்படலாம் அல்லது கோரப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவு V : பூர்வ இடத்துக்குத் திரும்பிச் செல்லுதல், மீளக்குடியேறுதல், மீள இணைதல் ஆகியன தொடர்பான விதிகள்

## விதி 28

1. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் தம் குடிமனைகளுக்கு அல்லது வழமையான இருப்பிடங்களுக்கு தாமாக, பாதுகாப்புடனும் கௌரவத்துடனும் திரும்பிச் செல்வதற்கு அல்லது நாட்டின் மற்றொரு பகுதியில் தாமாகக் குடியேறுதற்கு வாய்ப்பான நிலைமைகளை உருவாக்குவதுடன் அதற்கான வழி வகைகளை ஏற்படுத்துவதும் தகுதி வாய்ந்த அதிகாரிகளின் பிரதான கடமையும் பொறுப்புமாகும். இத்தைகய அதிகாரிகள், உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் தம் முன்னைய இடங்களுக்குத் திரும்பிச் சென்று மீளவும் குடியேறுவதற்கு அல்லது இணைந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்க முயலுதல் வேண்டும்.

2. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் மீண்டும் தம் இருப்பிடங்களுக்குச் செல்ல அல்லது குடியேற மேற்கொள்ளும் திட்டங்களிலும் நிர்வாகத்திலும் பூரணமாகப் பங்கு பெறுவதை உறுதி செய்வதற்கு விசேட முயற்சி எடுத்தல் வேண்டும்.

## விதி 29

1. தமது குடிமனைகளுக்கு அல்லது வழமையான இருப்பிடங்களுக்கு அல்லது நாட்டின் வேறொரு பகுதிக்குச் சென்று மீளவும் குடியேறியுள்ள இடம்பெயர்ந்த ஆள்கள், இடம்பெயர்ந்தவர்கள் என்னும் காரணத்தின் பொருட்டு பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படலாகாது. பொது விவகாரங்களின் சகல மட்டங்களிலும் முழுமையாகவும் சமமாகவும் பங்கு பெறுவதற்கும் பொதுச் சேவைகளில் சம வாய்ப்பை பெறுவதற்கும் அவர்களுக்கு உரிமை இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. உள்நாட்டில் இடம் பெயர்ந்து மீண்டும் தம் இடங்களுக்குத் திரும்பிய அல்லது மீளவும் குடியேறிய மக்கள், தாம் விட்டுச் சென்ற அல்லது இடம் பெயர்வின் போது இழந்த சொத்துகளையும் உடைமைகளையும் மீளப்பெறுவதற்கு முடிந்த வரை உதவும் கடமையும் பொறுப்பும் தகுதிவாய்ந்த அதிகாரிகளைச் சார்ந்ததாகும். அத்தகைய சொத்துகளையும் உடைமைகளையும் மீட்டுக் கொள்வது சாத்தியமில்லாத விடத்து, தகுந்த நட்ட ஈடு அல்லது வேறு வகையான இழப்பீடு வழங்க அல்லது பெற, தகுதிவாய்ந்த அதிகாரிகள் உதவுதல் வேண்டும்.

## விதி 30

1. சர்வதேச மனிதநேய அமைப்புகளும் ஏனைய தகுதி வாய்ந்த செயலர்களும் தத்தம் ஆணையை நிறைவேற்றும் பொருட்டு, உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களைத் துரிதமாகவும் இடையூறின்றியும் அவர்கள் தம் இருப்பிடங்களுக்குச் திரும்பிச் செல்ல அல்லது மீளக் குடியேறி சமுதாயத்தில் இணைந்து கொள்ள உதவுதற்கு சம்பந்தப்பட்ட சகல அதிகாரிகளும் அனுமதியும் வசதியும் அளித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org